## இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு – 2014

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

நியமத்தின் 08 ஆம் அத்தியாயத்தின் 2.5.2 பிரிவின் பிரகாரம் இலங்கை நிதி அறிக்கையிடல் கணக்கீட்டு நியமங்களினால் அனுமதிக்கப்பட்டவை தவிர நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு ஈடுசெய்யக்கூடாத போதிலும் தனியார் வங்கிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,252,493 தொகையான பாதகமான வங்கி மீதி அவ் வங்கியின் இன்னுமொரு கணக்கில் இருந்த ரூபா 17,675,427 ஆன சாதகமான வங்கி மீதியுடன் ஈடுசெய்யப்பட்டு தேறிய ரூபா 16,422,934 மீதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது பிலிப்பைன்ஸில் நடைபெற்ற அதி விஷேட பொதுக் கூட்டத்திற்காக வெளிநாட்டு பிரயாணத்திற்காக செலவழிக்கப்பட்டிருந்த எனினும் போட்டிகள் நடாத்தும் நாடுகளிடமிருந்து மீள்நிரப்பப்பட வேண்டிய ரூபா 593,040 தொகை மீளாய்வாண்டின்போது முற்பணக் கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானமொன்றின் மூலம் 01 ரூட் 20 பேர்ச் அளவிலான காணி தேசிய ஒலிம்பிக் குழுவின் பிரதான அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு | அமைச்சரால் தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கட்டளைகள் பிறப்பிக்க வேண்டிய போதிலும் குழுவின் செயற்பாடு மற்றும் பொறுப்புக்களுக்காக அத்தியாவசிய கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் அங்கத்தவர் தெரிவு போன்ற நடவடிக்கைகளின் போது உரிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 757(2) | 2014 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் குறித்த மெய்மையாய்வு அறிக்கை இவ்வறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2014 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய MS/4/4/20 ஆம் இலக்க விளையாட்டு அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை 03 மற்றும் 05 ஆம் பந்திகள் | 17 ஆவது ஆசிய விளையாட்டு விழாவிற்காக 17 பேர் கொரிய வெளிநாட்டு பிரயாணத்தில் பங்குபற்றியிருந்த போதிலும் சுற்றறிக்கை அறிவித்தல்களின் பிரகாரம் நாட்டுக்கு வந்து 10 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 1,000,000 ஆன பாதுகாப்பு பிணையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 4,785,500 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,128,471 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,913,971 அதிகரிப்பொன்று தேவைப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 26,291,588 ஆல் அதிகரித்திருந்தமை மேற்படி நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் ஒலிம்பிக் செயற்பாடுகளுக்கான போட்டிகளை நடாத்தும் நாடுகளிலிருந்து விமான பிரயாண சீட்டுகள் செலவினம் உட்பட வெளிநாட்டு பிரயாணங்களுக்காக ரூபா 2,216,377 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதற்குரிய கொடுப்பனவாக ரூபா 2,943,920 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கிடைத்த பணத்தை விட ரூபா 727,543 தொகை குழு நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் 07 செயற்திட்ட செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 23,871,527 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கொடுப்பனவுகளாக ரூபா 26,931,307 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிடைத்த பணத்தை விட ரூபா 3,059,780 தொகை குழு நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2013 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிம்பிக் குழுவின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன் இணைந்ததாக ரூபா 5,200,000 தொகைக்கு 2000 ''ஞாபகார்த்த புத்தகங்கள்'' அச்சிட்டு வழங்கும் செயற்பாட்டிற்காக, கொள்வனவு செயற்பாடுகளிலிருந்து விலகி தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அச்செயற்பாட்டிற்கு 2013 செப்தம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதம் முற்பணமாக ரூபா 2,600,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வறிக்கைத் திகதி வரையிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்படாதிருந்ததுடன் முற்பணத் தொகையான ரூபா 2,600,000 தொகை குறித்த ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக்கட்டுப்பாடு | (i) நீண்ட காலமாக முதலீடு செய்யக்கூடிய மிகைப் பணத்தை குறுங்கால முதலீடுகளில் செய்யப்பட்டிருந்தமை.<br>(ii) வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களுக்காக வேறு நாடுகளிலிருந்து கிடைக்கும் பணத்தை விட கூடுதலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |
| (ஆ) கணக்கீடு | கணக்குகளைச் சமர்ப்பித்தலில் தாமதம் |